N. Asokan
Secretary & Senior Research Fellow

No.5. Kavignar Puduvai Sivam St
Venkata Nagar Extension
Pondicherry 605 011 INDIA
Ph: off: (413) 2213758, 2212443, 2211592
Mobile : 94432 21770
Res: (413) 2211710, 2212778
Fax: (413) 2212338
e-mail: ashokmirra@gmail.com; motherssindia@gmail.com

The Mother's Service Society

14 / 02 / 2011

# P & P&இல் உள்ள புதுமைகள்

வாழ்க்கை என்பது எப்பொழுதும் ஒரே மாதிரி நிலைத்து நிற்பதில்லை. அது சதா மாறிக் கொண்டே இருக்கிறது. மேலும் அடுத்தடுத்து உயர்ந்த நிலைகளுக்கும் போய்க் கொண்டே இருக்கிறது. அப்படி உயர்ந்து கொண்டே போகும் பொழுது புதிய புதிய பரிமாணங்களையும் வெளிப்படுத்துகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்னால் மனிதன் வாழ்ந்த வாழ்க்கையையும் நாம் இப்பொழுது வாழ்கின்ற வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தோம் என்றால் எல்லா இடங்களிலும் இப்போதைய வாழ்க்கை பழைய வாழ்க்கையைவிட முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும். சாப்பாடாக இருக்கட்டும், துணிமணிகளாக இருக்கட்டும் மற்றும் போக்குவரத்து மற்றும், தகவல் தொடர்பு, பொழுதுபோக்கு என்று எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் இப்போதுள்ள வசதிகள் எதுவும் அன்று அத்துறைகளில் இல்லை. 300 வருடங்களுக்கு முன்பு நாம் வாழ்ந்த வாழ்க்கையை எடுத்துக் கொண்டால்கூட இப்போது நாம் அனுபவிக்கின்ற எந்த வசதியும் அப்பொழுது இல்லை. 300 வருடங்களுக்கு முன்பு இலண்டன், பாரீஸ் போன்ற மாநகரங்கள்கூட ஜனத்தொகையில் ஒரு சில லட்சங்களைத் தாண்டவில்லை. ஆனால் இப்பொழுது டோக்கியோ மற்றும் நியூயார்க் போன்ற மாநகரங்களில் ஜனத்தொகை ஒரு கோடியைத் தாண்டி விட்டதென புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இப்பொழுதுள்ள மின்சார வசதி மற்றும் கார், டூ வீலர், ட்ரெய்ன், விமானம், கம்ப்யூட்டர் போன்ற நவீன மெஷின்களையும், சாதனங்களையும் அப்போதுள்ள மக்கள் பார்த்ததும் இல்லை. கேள்விப்பட்டதுமில்லை. அம்மாதிரியே இன்னும் 200 வருடங்களுக்குப்பின் வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதைப்பற்றி நமக்கு ஐடியாவேக் கிடையாது. இதே வாழ்க்கையைத் தான் மக்கள் அப்போதும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்று நாம் சொல்வதற்கில்லை. இப்போது வசதி படைத்தவர்கள்தான் விமானத்தில் செல்கிறார்கள். ஆனால் 200 வருடங்கள் கழித்து எல்லோருமே விமானத்தில் போகக் கூடிய அளவிற்கு விமானப் பயணம் பஸ் பயணம் போல் மலிவாகி விடலாம்.

இன்று ஒரு பைபாஸ் சர்ஜரியோ மாற்று சிறுநீரக ஆபரேஷனோ அல்லது brain tumor ஆபரேஷனோ செய்வதற்கு ஒரு சில லட்சங்கள் செலவு வைக்கிறது. ஆனால் 200 வருடங்கள் கழித்து இதே ஆபரேஷன் 500-1000-த்திற்குள் முடியுமளவிற்கு மருத்துவ டெக்னாலஜி முன்னேற்றம் அடைந்திருக்கும்.

டெக்னாலஜியில் மட்டும்தான் உலகம் மாறியிருக்கிறது என்று நாம் சொல்வதற்கில்லை. நம்முடைய சமூக ஸ்தாபனங்கள், நாம் கடைபிடிக்கும் Values அதாவது பண்புகள் மற்றும், நடைமுறைகள், வாழ்க்கைப் பாணி அதாவது Life style என்று எல்லாமே பெருமளவிற்கு மாறி உள்ளன. உலகில் பெரும்பாலும் முடியாட்சி போய் குடியாட்சி வந்துள்ளது. பொருளாதாரத் துறையில் Pure free market captialism என்பது முற்றிலும் மறைந்து socialism மற்றும் communism வந்து விட்டன. சில நூற்றாண்டுகளுக்கு முன்புகூட

மதவழிபாடுதான் மக்களின் வாழ்க்கையின் மைய அம்சமாக விளங்கியது. வாழ்க்கை என்பது வழிபாடு செய்வது மற்றும் கோயில்களுக்கும், மசூதிகளுக்கும், தேவாலயங்களுக்கும் செல்வதையே ஒட்டி இருந்தது. ஆனால் மக்கள் இன்று மதங்களின் பிடியில் அவ்வளவாக இல்லை. மக்கள் தங்கள் கவனத்தை வருமானம், வசதி, முன்னேற்றம் என்று வேறு திசைகளில் திருப்பி கோயில்களில் பொழுதைக் கழிப்பதைவிட வாழ்க்கையை நன்றாக அனுபவிக்க வேண்டும் என்ற புதிய மனப்பான்மையை கொண்டு வந்து விட்டார்கள். பழங்காலத்தில் ஜாதி மற்றும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் serious-ஆக எடுத்துக் கொள்ளப்பட்டன. கீழ்நிலையில் இருப்பவர்கள் கீழேயே இருக்க வேண்டும் என்று சமூகம் நிர்பந்தித்தது. வாழ்க்கையில் முன்னேறுவதற்கு அவர்களுக்கு உரிமையே இல்லை என்று பேசப்பட்டது. ஆனால் இப்போது உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று ஜாதியின் அடிப்படையிலோ, பொருளாதார அடிப்படையிலோ, மதத்தின் அடிப்படையிலோ பிரிவினைகளை உண்டு பண்ணும் மனோபாவத்தை சமூகம் ஆதரிப்பதில்லை. எல்லோரையும் சமமாக நடத்த வேண்டும் மற்றும் சம உரிமைகள் வழங்க வேண்டும் என்ற மனோபாவதம்தான் இன்று உலகத்து மக்களிடையே நிலவுகிறது.

பழங்காலத்தில் உயர்ந்தவர்களின் அதிகாரத்திற்கு அப்படியே அடிபணிவது, அதிகாரத்தில் உள்ளவர்கள் சொல்வதை மறுபேச்சில்லாமல் ஏற்றுக் கொள்வது, ஊரில் நாலுபேர் எப்படியிருக்கிறார்களோ அப்படியே நாமும் இருப்பது (social conformity), வயதில் பெரியவர்களுக்கு மரியாதை கொடுப்பது மற்றும் சமூகத்தில் security-யை நாடிப் போவது போன்ற பழைய values-க்களெல்லாம் குறைந்து போய் சுதந்திரமாகச் செயல்படுவது, தனக்குப் பிடித்த மாதிரி வாழ்க்கையை அமைத்துக் கொள்வது, தன்னுடைய சொந்த கருத்தை வலியுறுத்துவது, அதிகாரத்தில் உள்ளவர்களை எதிர்த்துப் பேசுவது மற்றும் security-யைத் தேடாமல் adventure-ஐத் தேடுவதென்று மக்களுடைய values-க்கள் மிகவும் மாறிவிட்டன. கூட்டுக் குடும்பங்கள் குறைந்து தனிக் குடும்பங்கள் அதிகரித்து விட்டன. பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் ஒரு பக்கம் இருக்க இன்னொரு பக்கம் காதல் திருமணங்களும் அதிகரித்து வருகின்றன. சமையலறையே கதியென்று கிடந்த பெண்கள் இப்போது வேலை, உத்தியோகம் என்று எல்லா இடங்களுக்கும் வருகிறார்கள். பொது இடங்களிலும் சுதந்திரமாக நடமாடுகிறார்கள்.

நான் வலியுறுத்த விரும்பும் கருத்து என்னவென்றால் எதுவும் நெடுநாள் மாறாமல் நிலைத்து நிற்பதில்லை. இருப்பதைவிட புதியதாகவும், அதைவிட சிறந்ததாகவும் இருக்கின்ற மற்றொன்று பழையதை கிளப்பி விட்டு புதியதாக அதனிடத்திற்கு வந்து விடுகிறது. சமூகத்தினுடைய முன்னேற்றத்தினுடைய சாராம்சமே இதுதான். படைப்பைபற்றி அன்னை சொல்கின்ற கருத்தும் சமுகத்தில் நிகழ்கின்ற மாற்றமும் முழுவதும் ஒத்துப் போகின்றன. படைப்பு எந்நேரமும் இறைவனை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது. என்றும் அப்படி முன்னேறும் பொழுது பழைய அம்சங்களை விட்டுவிட்டு புதிய பரிமாணங்களை வெளிப்படுத்துகிறது என்றும் அன்னை ஒரு கருத்து தெரிவித்திருக்கிறார். மேலும் அவர் படைப்பைப்பற்றி சொன்ன ஒரு கருத்து நமக்கு மிகவும் அதிர்ச்சியை கொடுக்கக் கூடியதாக இருக்கும், அதாவது இந்த பிரம்மாண்டமான படைப்பு ஒவ்வொரு நிமிடமும் தன்னுடைய எல்லா அம்சங்களிலும் தன்னை புதுப்பித்துக் கொண்டிருக்கிறது என்று அவர் சொல்கிறார். அதாவது இந்த நிமிடம் இருக்கின்ற பிரபஞ்சமும், அடுத்த நிமிடம் இருக்கின்ற பிரபஞ்சமும் வேறுவேறு என்றாகிறது. இப்படி நிமிடத்திற்கு நிமிடம் பிரபஞ்சம் முழுவதும் மாறுகிறது என்பது நமக்கு தெரிவதேயில்லை. நமக்கு எல்லாம் ஒரே மாதிரிதான் இருப்பதாகத் தெரிகிறது. நமக்கு தெரியவில்லை என்பதால் அன்னை சொல்வது உண்மை இல்லை என்றாகிவிடாது.

அன்னையும், பகவானையுமே நாம் புதுமைக்கு முன் உதாரணங்களாகச் சொல்லலாம். அவர்களுடைய சிந்தனை, செயல்பாடு, கற்பனை மற்றும் எதிர்காலத்தைப்பற்றி அவர்கள் சொல்லியிருக்கின்ற கணிப்புகள் எல்லாமே புதுமையாகத்தான் இருக்கின்றன. அவர்களுடைய ஆன்மீக உபதேசங்கள் புதுமையானவை. அவர்கள் கண்டறிந்த சத்திய ஜீவியம் புதுமையானது. அடுத்ததாக திருவுருமாற்றத்திற்கு அவர்கள் சொல்கின்ற பூரண யோக அணுகுமுறையும் புதுமையானது. அவர்கள் தங்கள் வாழ்க்கையை வாழ்ந்த விதம், அவர்கள் செயல்பட்ட விதம் மற்றும் அவர்களுடைய பக்தர்களுக்கும்,

சீடர்களுக்கும் எப்படி வாழ வேண்டும், எப்படி வாழ்க்கையையும், யோகத்தையும் இணைக்க வேண்டும் என்று சொல்லிய எல்லாமே புதுமையானவைதான். உலகத்தின் பரிணாம வளர்ச்சியின் அடுத்த கட்டம் சத்திய ஜீவியம் இறங்குவது என்றும் வாழ்க்கை இறைமயமாகி சத்திய ஜீவிய மனிதன் உருவாகப் போகிறான் என்றும் அவர்கள் அறிவித்தது இந்திய ஆன்மீக பாரம்பரியத்தில் ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்தது. ஏனென்றால் அதுவரையிலும் பூவுலக வாழ்க்கையையும், மானிட பிறப்பையும் வேண்டாம் என்று தவிர்த்து மோட்சத்தை நாடுவதுதான் இந்திய ஆன்மீகத்தின் நோக்கமாக இருந்தது. மேலும் பரம்பரை யோகங்களைப் போல அறிவையோ, உணர்வையோ அல்லது வேலையையோ மற்றும் உடம்பையோ என்று ஏதேனும் ஒன்றை பரிசுத்தி செய்வது என்றில்லாமல் நம் முழுஜீவனையும் திருவுருமாற்றம் செய்ய வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியதும் ஒரு புதுமையான உபதேசமாக அமைந்தது.

பெண்களுக்கும், ஆன்மீகத்தில் சம உரிமை உண்டு என்று அன்னை சொன்னதும் பூரண யோகத்தில் தியானத்திற்கு கொடுக்கப்படுகின்ற அதே முக்கியத்துவம் பிஸிக்கலாக நாம் செய்யும் வேலைக்கும் உண்டு என்று சொன்னதும், உலக ஒற்றுமையின் சின்னமாக ஆரோவில் நகரத்தை துவக்கி வைத்ததும், பரமசிவன், மகாவிஷ்ணு, கிருஷ்ண பகவான் மற்றும் முருகர், விநாயகர் போன்ற கடவுள்களை வழிபடுவதைத்தாண்டி பரம்பொருளை வழிபடுவதுதான் சரி என்று அன்னை சொன்னதும் என்று இவை எல்லாமே இந்திய ஆன்மீகத்தில் புதுமையான கருத்துகளாகும். அம்மாதிரியே அரசியல் போராட்டத்திற்கு பதிலாக தவத்தை மேற்கொண்டு ஆன்மீக சக்தியை பயன்படுத்தி இந்தியாவிற்கு சுதந்திரத்தை வாங்கித் தரலாம் என்று பகவான் முயற்சி செய்ததும், பூரண யோகத்தில் மானிட குருநாதருக்குப் பதிலாக உள்ளிருக்கும் இறைவனையே குருவாக பயன்படுத்தலாம் என்று சொன்னதும், இதுவரையில் எந்த இந்திய தத்துவ ஞானியோ ஆன்மீக சிறப்புப் பொருந்திய மகானோ விளக்காத அளவிற்கு இறைவன் எப்படி படைப்பை நிகழ்த்துகிறான், படைப்பில் உள்ள அடிப்படை செயல்பாடுகள் என்ன, ஆன்மா எப்படி ஜடமாக மாறியுள்ளது, ஜடத்திலிருந்து மீண்டும் எப்படி ஆன்மா வெளிவருகிறது என்று படைப்பின் அடிப்படை ரகசியங்களை லைஃப் டிவைன் புத்தகத்தின் மூலம் விவரமாக விளக்கி எழுதியதும் இந்திய ஆன்மீக வரலாற்றில் மிகவும் புரட்சிகரமான புதுமைகளாக அமைந்துள்ளன.

இதுவரையிலும் சொன்னதுபோக அவர்கள் செய்த மேலும் சில புதுமையான செயல்பாடுகளையும், வெளியிட்ட புதுமையான சில கருத்துகளையும் இங்கே பட்டியலிட விரும்புகிறேன்.

1. நாம் கடவுள்களை (பரமசிவன், மகாவிஷ்ணு, முருகர், விநாயகர் போன்றவர்கள்) வியந்து பாராட்டி வழிபட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அன்னையோ இந்த கடவுள்களுக்கு இல்லாத சைத்தியப் புருஷன் மனிதர்களுக்கு இருப்பதால் மனிதன் தெய்வங்களைவிட உயர்ந்தவன் என்றும் மனிதனால் சத்திய ஜீவிய பிறவியாக மாற முடியும். ஆனால் மானிட பிறப்பு எடுத்தாலன்றி தெய்வங்களால் நேரடியாக சத்திய ஜீவிய பிறவியாக மாற முடியாது என்ற ஒரு புரட்சிகரமான கருத்தை வெளியிட்டுள்ளார்.

2. மலர்களின் ஆன்மீக முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றிற்கு எல்லாம் ஆன்மீகம் பொருந்திய பெயர்களை சூட்டியிருப்பது அன்னையினுடைய ஒரு புதுமையான செயல்பாடாகும்.

3. அகம்தான் புறத்தை நிர்ணயிக்கிறது. புறம் என்பது அகத்தின் பிரதிபலிப்புதான் என்று அவர் சொன்ன கருத்தை ஸ்ரீ அப்பா அவர்கள் Life Response என்ற புதிய பெயர் கொடுத்து Psychology-இல் ஒரு புதிய கண்ணோட்டத்தையே ஏற்படுத்தியுள்ளார்.

4. மதங்களின் ஆட்சி முடியும் காலம் வந்துவிட்டது என்றும் எதிர்காலம் ஆன்மீகத்திற்குதான் உரியது என்றும் அன்னை தெரிவித்த பொழுது conservative மனப்பான்மையுள்ள

பழமைவாதிகள் பலபேருக்கு அது மிகவும் அதிர்ச்சியாகவும், அதே சமயத்தில் ஒரு புதுமையான கருத்தாகவும் அமைந்தது.

பகவான் மற்றும் அன்னையின் சீடர்கள் என்ற முறையில் ஆன்மீகத்தில் பலப்பல புதுப்புது விஷயங்களை அவர்கள் மூலமாக நாம் அறிந்து கொண்டுள்ளோம். இப்பொழுது P & P நமக்கு வாழ்க்கையைப் பற்றியும் Life Response செயல்பாடுகளைப்பற்றியும் நிறைய புது கருத்துக்களையும், விஷயங்களை கற்றுக் கொடுக்கக் கூடிய திறன் படைத்தது என்று அப்பா மூலம் தெரிந்து கொண்டுள்ளோம். அப்படி P & P-இல் என்ன விஷயங்கள் இருக்கின்றன என்று சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

1. முதலாவதாக Life Response விதிமுறைகள் எப்படி செயல்படுகின்றன என்பதற்கு இந்த கதை சிறந்த நிருபணமாக அமைந்துள்ளதாக அப்பா கருத்துத் தெரிவித்துள்ளார். கதையில் உள்ள முக்கிய கதாப்பாத்திரங்கள் அவர்களுக்கு வந்துள்ள பிரச்சினைகளை எப்படி பொருத்தமான மனமாற்றங்களைக் கொண்டு வந்து வெற்றிகரமாக சமாளிக்கிறார்கள் என்று நாம் பார்க்கிறோம். Life Response Theory-ன் சாராம்சமே அகம் புறத்தை நிர்ணயிக்கிறது என்பதுதான். நமக்கு புறத்தில் எந்தவிதமான Result வேண்டுமோ அதற்கேற்ற எண்ணங்களையும், உணர்வுகளையும், மனோபாவங்களையும் நாம் அகத்தில் கொண்டு வந்தால் அவை தானாகவே செயல்பட்டு நாம் விரும்புகின்ற புறமாற்றங்களையும், நல்ல பலன்களையும் கொண்டு வருகிறது என்று நாம் பார்க்கலாம்.

2. நமக்குண்டான அதிர்ஷ்டம் மற்றும் ஐஸ்வர்யத்தை அபிவிருத்தி செய்து கொள்வதிலும் நம்முடைய சாதனை புரியும் திறன்களை மேம்படுத்திக் கொள்வதிலும் ஆர்வமாக உள்ளோம். இதற்கு பதில் அளிக்கும் வகையில் அப்பா என்ன சொல்கிறார் என்றால் நல்லெண்ணம், சுமுகம், Self-giving, அடக்கம், Organisation, மனமாற்றம் மற்றும் மௌனசக்தி போன்ற பண்புகள் அதாவது Values நம்முடைய ஐஸ்வர்யம் மற்றும் சாதனையை மேம்படுத்தும் என்று சொல்கிறார். அதே சமயத்தில் உணர்ச்சிவயப்பட்ட செயல்பாடு, ஆணவமான போக்கு, குறுகிய மனப்பான்மை மற்றும் அவசரப்படுத்துதல் மற்றும் வீண் எதிர்பார்ப்பு போன்றவைகள் நம்முடைய சாதனைகளை கெடுத்து வீண் பிரச்சினைகளை உண்டாக்கும் என்றும் சொல்கிறார். இக்கதை அப்பாவினுடைய இந்த கருத்துக்கள் உண்மை என்று நிரூபிப்பிதை நாம் பார்க்கிறோம்.

3. Individuality என்ற தனித்தன்மையைப்பற்றி அப்பா நிறைய எழுதியிருக்கிறார். மற்றும் வலியுறுத்தவும் செய்திருக்கிறார். Social conformity என்ற சமுகத்தோடு ஒத்துப் போகும் மனநிலையைத் தாண்டி தனித்தன்மையை உருவாக்கிக் கொள்கின்ற எந்த ஒரு நபரும் தன்னுடைய சாதிக்கும் திறனை மற்றவர்களைவிட ஆயிரம் மடங்கு உயர்த்திக் கொள்ளலாம் என்பது அப்பாவினுடைய கூற்று. இந்தக் கூற்றின் உண்மையை லிசி என்ற கதாப்பாத்திரம் சிறப்பாக நிரூபிப்பதை நாம் இக்கதையில் பார்க்கிறோம். அவள் தனக்கென்று ஒரு தனித்தன்மையை வளர்த்துக் கொள்கிறாள். தனக்கென்று சில Valuesகளையும் வளர்த்துக் கொண்டு எவ்வளவு பெரிய சிரமம் வந்தாலும், நஷ்டம் வந்தாலும் அந்த Valuesகளை விடாமல் அவற்றில் உறுதியாக நிற்கிறாள். இதனால் அவள் தனக்கு ஒரு பெரிய அதிர்ஷ்டத்தை உண்டுபண்ணிக் கொள்கிறாள் என்று நாம் இக்கதையில் பார்க்கிறோம்.

4. ஜேன் ஆஸ்டின் மனித சுபாவத்தை எவ்வளவு சிறப்பாகவும், ஆழமாகவும் புரிந்து வைத்திருக்கிறார் என்பதை இக்கதையின் மூலம் நமக்குத் தெரிகிறது. இத்தகைய அறிவு முதிர்ச்சியை நாம் பொதுவாக 50 வயதை கடந்த எழுத்தாளர்களிடம்தான் நாம் பார்ப்போம்.

ஆனால் P&P-யின் முதல் draft-ஐ ஜேன் ஆஸ்டின் எழுதும் பொழுது அவர்களுக்கு வயது வெறும் 21 தான். இவ்வளவு சின்ன வயதில், இவ்வளவு சிறப்பாக மனித சுபாவத்தை ஒருவர் புரிந்து கொண்டிருக்கிறார் என்பதே நமக்கு ஒரு புதுமையான செய்தியாகத்தான் இருக்கிறது. அப்பா நமக்கு Life Response மற்றும் Innter, outer correspondence-ஐ பற்றி நிறைய கற்றுக் கொடுத்திருக்கிறார். ஆனால் ஜேன் ஆஸ்டினுக்கு யாரும் கற்றுக் கொடுத்ததாகத் தெரியவில்லை. அவர் தானாகவே இதையெல்லாம் புரிந்து கொண்டு எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

இப்பொழுது இக்கதையில் உள்ள முக்கிய கதாப்பாத்திரங்கள் வெளிப்படுத்தி இருக்கின்ற புதுமையான மனோபாவங்கள் மற்றும் புதுமையான செயல்பாடுகளையும் பார்ப்போம்.

டார்சி: டார்சியினுடைய Personality-யில் புதிய மற்றும் வழக்கத்திற்கு மாறான பரிமாணங்கள் காணப்படுகின்றன. உயர்ந்த சமூக அந்தஸ்தும், மிகப்பெரிய சொத்தும் பணவசதியும் கொண்ட டார்சி போன்ற ஒரு பிரபு வம்சத்தைச் சேர்ந்த இளைஞன் லிசி போன்ற சாதாரண குடும்பத்துப் பெண்ணை மணக்க விரும்புவது வழக்கமான சமூக நடைமுறைக்கு மாறான ஒரு புதிய செயல்பாடாகும். ஆனால் தமிழ் திரைப்படங்களில் பணக்கார பெரிய இடத்து இளைஞர்கள் சாதாரண ஏழை குடும்பத்து பெண்கள்மேல் விருப்பம் கொண்டு பழக முன்வருவது போன்று நிறைய காட்சிகள் வந்து விட்டன என்பதால் இது நமக்கு அவ்வளவு புதியதாகத் தெரியாமல் போகலாம். ஆனால் அன்றைக்கு அவன் செய்தது அந்தக் காலத்து சமூக சூழ்நிலைக்குப் புதியது என்பதைதான் நாம் பார்க்க வேண்டுமே தவிர இன்றைய திரைப்படக் காட்சிகளை வைத்து நாம் இது ஒன்றும் புதிதல்ல என்று சொல்லக் கூடாது. ஆனால் அவள் அவனை மறுத்த பிறகும் அவளுடைய அன்பையும், பாராட்டையும் திரும்பப் பெறுவதற்கு அவன் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் அவன் கையாண்ட அணுகுமுறைகளும் முற்றிலும் வழக்கத்திற்கு மாறான அணுகுமுறைகளாகும். அவளைப் பார்ப்பதற்காக அவன் அந்த மெரிட்டன் கிராமத்திற்கு மீண்டும் போகவில்லை. மற்றும் திருமண proposal-ஐ மீண்டும் அவன் உடனே அவளுக்கு வழங்க முயற்சியும் செய்யவில்லை. தெரிந்தவர்கள் மூலமும் தூது அனுப்பவும் இல்லை. லிடியா மற்றும் விக்கமுடைய திருமணத்தை அவன் ஏற்பாடு செய்தபொழுதுகூட இது தான் செய்த ஏற்பாடு என்று லிசிக்கு தெரிய வேண்டும் என்றுகூட அவன் முயற்சி செய்யவில்லை. எல்லாவற்றையும் கார்டினர்தான் செய்தது போலவும், தன்னுடைய ஈடுபாட்டை மிகவும் இரகசியமாக வைத்துக் கொண்டான். தான் அவளை மீண்டும் நாடுவதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்னும் பொழுது எப்படி அவளை அவன் தன்னுடைய இடத்திற்கே வரவழைத்தான் மற்றும் மீண்டும் proposal கொடுத்தால் ஏற்றுக் கொள்கிறேன் என்று அவளை சொல்ல வைத்தான் என்பதில்தான் அவனுடைய புதுமையே இருக்கிறது. இதற்குண்டான பதில் மௌன சக்தியில் இருக்கிறது. தன்னை அவளுக்கு பிடிக்காமல் போனதற்கும், தன்னிடமிருந்து தள்ளி நிற்க வேண்டும் என்று அவளுக்கு தோன்றியதற்கும் காரணமாக தன்னிடம் என்ன இருக்கிறது என்பதை அவன் சிந்தித்துப் பார்த்துத் தெரிந்து கொண்டான். தன்னுடைய ஆணவம் தன்னுடைய தனக்கு ஒரு நியாயம் மற்றவர்களுக்கு ஒரு நியாயம் என்ற Double Standards, அவனுடைய நண்பனின் பர்சனல் விஷயங்களில் அதிகமாக தலையிட்டது Social Status மற்றும் ஜீவனில்லாத வெளிப்புறத் தோற்றங்களை அளவுக்கு அதிகமாக மதித்தது இவையெல்லாம் தன்னிடம் குறைபாடுகளாக இருக்கின்றன என்று அவன் உணர்ந்தான். இந்த இடங்களில் எல்லாம் அவன் மாறவும் முன் வந்தான். தன்னுடைய ஆணவத்தை விட்டு பணிவை வரவழைத்துக் கொண்டான். தன்னுடைய கண்ணோட்டத்தையே வலியுறுத்திக் கொண்டிருந்தவன் விட்டுவிட்டு லிசியினுடைய கண்ணோட்டத்தில் இருக்கின்ற உண்மை, பிங்கிலியினுடைய கண்ணோட்டத்தில் இருக்கின்ற உண்மைகளை ஏற்றான். தன் நண்பனான பிங்கிலியிடம் சென்று உன் திருமண விஷயத்தில் நான் இனிமேல் தலையிட மாட்டேன். நான் ஏதோ தவறாக புரிந்து கொண்டேன். உன் விருப்பம் போல் நீ ஜேனுக்கு proposal கொடுக்கலாம் என்று தான் ஏற்படுத்திய தடைகளை தானே விலக்கிக் கொள்கிறான். மனமாற்றத்திற்கு முன்பு லிசியின் மாமாவும், மாமியும் திரு. மற்றும் திருமதி. கார்டினர் ஆகிய இருவரும் லண்டனில் Cheapside என்ற working class area-வில் இருப்பதாகக் குறைச் சொல்லிக் கொண்டிருந்தவன் இப்பொழுது அவர்கள் இருக்கும் இடத்தை

விட்டுவிட்டு அவர்கள் ஏழைகள் என்றாலும் பண்பில் சிறந்தவர்கள் என்பதை உணர்கிறான். எல்லாவற்றிற்கும் மேலாக பென்னட் குடும்பத்திற்கு லிடியா ஓடிப் போனதால் வந்த அவமானத்திற்கு தான் **Consciousness Responsibility** எடுத்துக் கொண்டு நடந்த தவற்றை சரி செய்து பரிகாரம் செய்ய தான் முன்வருவது மிகவும் புதுமையான விஷயமாகும்.

1. சாதாரணமாக இப்படி ஒரு அவமானத்தை தான் பட்ட பிறகு பென்னட் குடும்பத்திற்கு வந்த சிரமத்தை நீக்க வேண்டும் என்று டார்சி எந்தப் பொறுப்பையும் உணர வேண்டிய அவசியமோ மற்றும் லிடியாவைத் தேடிக் கண்டுபிடித்துக் காப்பாற்ற வேண்டும் என்ற தேவையோ அவனுக்கில்லை. ஏற்கனவே பென்னட் குடும்பம் manners இல்லாத மட்டமான குடும்பம் என்று தான் புரிந்து கொண்டிருந்ததை இந்த சம்பவம் மேலும் உறுதிப் படுத்துகிறது என்று அவன் எடுத்துக் கொள்ளலாம். அதே சமயத்தில் லிசியை டின்னருக்கு அழைக்க வேண்டும் என்று தனக்கு வந்த ஒரு விருப்பத்தையும் மாற்றிக் கொண்டு இனிமேலும் அவளோடும், அவள் குடும்பத்தாரோடும் தொடர்பு வைத்திருந்தால் அது தனக்கு ஒரு களங்கம் உண்டாகும் என்று நினைத்து விலகி இருக்கலாம். இப்படி ஒரு செய்தியை அவள் சொன்னவுடன் அவளை டின்னருக்கு அழைக்காமல் அப்படியே திரும்ப சென்றிருந்தால் அவனை யாரும் குறை சொல்லியிருக்க மாட்டார்கள். ஆனால் யாரும் எதிர்ப்பார்க்காத வகையில் நடந்த அசம்பாவிதத்திற்கு தானும் ஒரு முக்கிய காரணம் என்று தன் மனதில் ஏற்றுக் கொண்டு யாருக்கும் தெரியாமல் தன்னால் முடிந்த அளவிற்கு வந்த பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்கிறான். விக்கமோடு அவனுடைய தங்கை சம்மந்தப்பட்டிருப்பதால் அவன் ஒரு தப்பான பேர்வழி என்று மெரிட்டன் கிராமத்தில் எல்லோரிடமும் சொன்னால் எங்கே தன் தங்கையின் பெயரும் வெளிவந்து விடுமோ என்று பயந்து விக்கமைப்பற்றி தனக்கு தெரிந்ததை மூடி மறைத்தது தான் நடந்த அசம்பாவிதத்திற்கே முழு முதல் காரணம் என்று அவன் நினைத்தான். லிடியாவும், விக்கமும் ஓடிப்போன விஷயத்தில் பல பேர் சம்மந்தப்பட்டிருந்தாலும், நடந்த எல்லாவற்றிற்கும் தான் மட்டுமே பொறுப்பு என்பது போலவும் மற்றவர்கள் எவருக்கும் எந்த பொறுப்பும் இல்லை என்பது போலவும் டார்சி நடந்து கொண்டான். ஆனால் உண்மையில் லிடியாவின் பேரிலும் தவறுள்ளது விக்கமின் பேரிலும் தவறுள்ளது. தாயார் என்ற முறையில் திருமதி. பென்னட் அவர்கள் தன் மகளைப்போய் ''நன்றாக அனுபவித்துவிட்டு வா'' என்று உற்சாகம் ஊட்டி அனுப்பியது திருமதி. பென்னட் செய்த ஒரு பெரிய தவறாகும். மேலும் நிறைய இளைஞர்கள் இருக்கக் கூடிய ஒரு இடத்திற்கு காதல் வேகம் மிகுந்த தன் மகள் போகத் துடிக்கும் பொழுது அந்த இடத்தில் குடும்பத் தலைவர் என்ற முறையில் தன் அதிகாரத்தை செலுத்தி அவளைக் கண்டித்து தடுத்து நிறுத்தாமல் திரு. பென்னட் அவர்கள் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டது அவர் செய்த தவறயாகும். லிசியை எடுத்துக் கொண்டால்கூட விக்கமைப்பற்றி அவளுக்கு டார்சி மூலம் ஒரு தகவல் வந்திருக்கிறது. அதை அவள் தன் தகப்பனாருக்கு அந்த நேரம் சொல்லியிருந்தால் அவர் உஷாராகி, லிடியா போவதைத் தடுத்திருப்பார். பின்னால் நடந்த விபரீதத்தை இவ்வகையில் தடுத்திருக்கலாம். விக்கம்மேல் அவளுக்கு இன்னமும் ஒரு soft-corner இருந்ததால் அவள் சொல்லாமல் மறைத்தது அவளுடைய தவறு என்றாகிறது. இவ்வளவு பேரிடமும் தவறிருக்கும் பொழுது தன்னைத் தவிர வேறு யார்யார் இவ்விஷயத்தில் தவறு செய்திருக்கிறார்கள் என்று அவன் கண்டறிய முயற்சியே செய்யவில்லை. மற்றவர்கள் யாரையும் திருத்தவும் அவன் நடவடிக்கை எடுக்கவில்லை. நடந்த விபரீதத்தற்கு தான் முழுப் பொறுப்பு ஏற்றுக் கொண்டு நிலைமையை சரி செய்ய தன்னால் என்ன செய்ய முடியுமோ அதை அவன் செய்தான். அவன் மௌனமாகத் தன்னைத்தானே திருத்திக் கொண்டான். அந்த திருத்தம் ஒன்றுமே செய்ய முடியாது என்று எல்லை மீறிப் போன ஒரு பிரச்சினையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து ஒரு நல்ல தீர்வை கொடுத்தது.

அவனையும் மீறி அவன் செய்த நல்ல உதவி லிசியின் காதுகளுக்கு எட்டி மீண்டும் proposal கொடுத்தால் ஏற்றுக் கொள்கிறேன் என்று அவளை சொல்ல வைத்தது. Silentwill-உடைய power எவ்வளவு மகத்தானது என்று நாம் இதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். மிகவும் சிக்கலான பிரச்சினைகளில்கூட சம்மந்தப்பட்ட ஒருவர் silentwill-ஐ மேற்கொண்டால் விரைவில் நல்ல தீர்வு வருவதை அவர் பார்க்கலாம்.

லிசி: டார்சி எந்தளவு புரட்சிகரமான கதாநாயகனாக செயல்பட்டானோ அதே அளவிற்கு புரட்சிகரமாக லிசியும் தன்னளவில் செயல்பட்டிருக்கிறாள். அவளிடத்தில் என்ன புதுமையுள்ளது என்பதை நாம் இப்பொழுது பார்க்க வேண்டும். அவள் பழகிக் கொண்டிருந்த சமூகத்திலுள்ள மற்ற பெண்மணிகள் மற்றும் இளம்பெண்கள் ஆகியவர்களைவிட இவள் வேறுபட்டு தனித்து நிற்கிறாள் என்பதுதான் அவளிடம் உள்ள புதுமை. எங்கே, எப்படி வேறுபட்டு நிற்கிறாள் என்று நீங்கள் கேட்கலாம். இந்தக் கதையில் வருகின்ற மற்ற பெண் கதாப்பாத்திங்களிடம் இல்லாத ஒரு individuality-யும் அதாவது தனித்தன்மையும் ஒரு formed personality-யும் அவளிடம் தென்படுகின்றன. Individuality என்றால் என்ன? தன் வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்வது என்பதைப்பற்றி சிந்தித்துத் தனக்கென ஒரு தனிப்பாணி அமைத்துக் கொண்டு தனக்கென்று சில values-களையும், இலட்சியங்களையும் ஏற்றுக் கொண்டு மற்றவர்கள் அதை ஏற்கிறார்களோ, இல்லையோ தனக்கு சரி என்று படுவதை தைரியமாகச் செயல்படுத்தும் திறனைதான் individuality என்கிறோம்.

ஜேன், ஷார்லேட் மற்றும், கரோலின் போன்ற பெண்கள் ஒரு economic security மற்றும் நல்ல பாதுகாப்பு வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் திருமணத்தை நாடினார்கள். அவளுடைய இன்னொரு சகோதரியான லிடியாவோ இதற்கும் கீழே சென்று வெறும் உடல் சுகத்திற்காக ஆண் துணையை நாடியிருக்கிறாள். ஆனால் திருமண விஷயத்தில் லிசி இப்படி economic security-யோ அல்லது உடல் சுகத்தையோ நாடியதாகத் தெரியவில்லை. தனக்குப் பிடித்தவராகவும், தன் மனதைக் கவர்ந்தவராகவும் இருக்கக் கூடிய ஒரு நபரைத் தேர்ந்தெடுத்து அவரைத்தான் திருமணம் செய்து கொள்வேன் என்று அவள் உறுதியாக நிற்கிறாள். அதாவது எதிர்கால security-காக திருமணம் செய்து கொள்ளாமல் அன்பிற்காகத் திருமணம் செய்து கொள்வேன் என்று அவள் எடுக்கின்ற முடிவு மற்ற பெண்களிடமிருந்து அவளை வேறுபடுத்திக் காட்டுகிறது. தன்னைப் போன்று சில திடமான values-களும், இலட்சிய மனப்பான்மையும் உள்ள ஆண்மகனைத்தான் அவள் தேடினாளே தவிர நல்ல வசதியான இடம், பணமுள்ள இடம், மற்றும் ஒரு அழகான தோற்றமுள்ள இளைஞன் என்று இவற்றைப் பிரதானமாகத் தேடியதாகத் தெரியவில்லை. ஆரம்பத்தில் விக்கமுடைய அழகு மற்றும் இனிமையான பேச்சில் மயங்கினாள் என்றாலும் நேர்மையற்றவன் என்று தெரியும் பொழுது அவனை விட்டு விலகுகிறாள் என்பதையும் நாம் கருத வேண்டும். Economic Security-யை அவள் பெரிதாக நினைத்திருந்தால் காலின்ஸ் proposal வழங்கும் பொழுது மறுப்பேச்சில்லாமல் ஒத்துக் கொண்டிருந்திருப்பாள். ஏனெனில் அவன் ஒரு நல்ல வேலையில் நல்ல வருமானத்துடன் இருந்தான். மேலும் அவனை மணந்து கொண்டிருந்தால் அவனுடைய சொத்தும் அவளுடைய குடும்பத்தாருடைய கையைவிட்டு வெளியில் போயிருக்காது. ஆனால் காலின்ஸை அவள் நிராகரித்தாள் என்னும் பொழுது Economic Security-யை அவள் நாடியதாகத் தெரியவில்லை. அழகான மணமகன்தான் வேண்டுமென்று திடமாக முடிவு செய்திருந்தாள் என்றால் விக்கம் நேர்மையற்றவன், மைனர் பெண்ணோடு ஓட முயற்சி செய்தவன் என்று தெரிந்த பிறகும் அவன்மேல் இருந்த மோகம் குறையாமல் அவனுடைய தொடர்பையும் நாடியிருப்பாள். ஆனால், அவன் நேர்மையற்றவன் என்று தெரிந்த பிறகு அவள் விலகினாள் என்னும் பொழுது அழகான தோற்றத்தையும் அவள் பெரியதாக கருதினாள் என்று சொல்வதற்கில்லை. டார்சி தன்னை திருத்திக் கொண்டு Gentleman என்ற சிறப்பிற்குரியவனாக தன்னை நிரூபிக்கும் பொழுதுதான் லிசி அவன்மேல் ஒரு மதிப்பும், மரியாதையும் வைத்து அன்பு காட்ட ஆரம்பிக்கிறாள். அவன் ஆணவம் மிகுந்தவனாகவும், தன் சகோதரியின் திருமண முயற்சிகளைத் தடை செய்பவனாகவும், social status-ஐ வலியுறுத்துபவனாகவும் இருக்கும் பொழுது அவன் ஒரு பெரிய எஸ்டேட் மற்றும் மாளிகையுடன் வந்தாலும் அவனை இவள் மதிக்கவில்லை. அகம்பாவத்தை விட்டுவிட்டு பணிவை

வரவழைத்துக் கொண்டு அவன் பொதுவாக போகவேப் பிரியப்படாத இடங்களுக்கெல்லாம் சென்று லிடியாவையும், விக்கமையும் தேடி கண்டுபிடித்து அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் பொழுதுதான் அவளுடைய அன்பிற்கு அவன் உரியவனாகிறான்.

<u>இதர கதாப்பாத்திரங்கள்</u>: டார்சி மற்றும் லிசியைத் தவிர திரு. பென்னட், சார்லட் மற்றும் கார்டினர் தம்பதிகள் போன்றவர்களும் புதுமையான மற்றும் அவர்கள் இருக்கக்கூடிய சூழ்நிலையில் யாரும் எதிர்பார்க்க முடியாத குண விசேஷங்கயையும் வெளிப்படுத்துகிறார்கள். திரு. பென்னட்டை எடுத்துக் கொண்டால் பல வருடங்களாக மனைவிக்கு அடங்கியக் கணவராகவும், பொறுப்பற்றக் குடும்பத் தலைவராகவும் நடந்து கொண்டுள்ளார். அவர்கள் நாட்டில் அந்தக் காலக்கட்டத்தில் வீட்டில் பல பெண்கள் இருந்தால் பெரிய பெண்ணை மட்டும்தான் டான்ஸ், பார்ட்டி என்றெல்லாம் அனுப்புவார்களாம். அவளுக்குத் திருமணம் நிச்சயம் ஆகும்வரை மற்ற பெண்களை வீட்டிலேயே நிறுத்தி வைப்பார்களாம். ஆனால் பென்னட் குடும்பத்தில் இஷ்டம்போல் ஐந்து பெண்களையும் எல்லா டான்ஸ் நிகழ்ச்சிகளுக்கும் போய் வருமளவிற்கு பெண்களைக் கட்டுப்படுத்த முடியாமல் சுதந்திரமாக விட்டிருக்கிறார்கள். மேலும் எந்த பொறுப்பான குடும்பத் தலைவரும் வருடாந்திரக் குடும்ப வருமானம் சொற்பமாக இருக்கும் பொழுது பெண்களின் திருமணத்திற்கு எதுவும் சேமிப்பு செய்யாமல் எல்லாவற்றையும் செலவு செய்ய மனைவியை அனுமதிக்க மாட்டார். ஆனால் திரு. பென்னட் இப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறார். இப்படி இத்தனை வருடம் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டிருந்தவர் ஓடிப்போன லிடியாவிற்கு மைத்துனர் தன் செலவில் திருமணம் செய்து வைத்துள்ளார் என்று தெரியும் பொழுது இத்தனை நாள் இல்லாத பொறுப்புணர்வு அவருக்கு திடீரென்று வருகிறது. மைத்துனர் தான் செய்த செலவை ஈடு செய்யுங்கள் என்று கேட்காத பொழுதும், அப்படியே ஈடுசெய்ய விரும்பினாலும் இவருக்குப் பல வருடங்களாகும் என்ற நிலை இருந்த பொழுதும், கேட்காத இடத்திலும், முடியாத இடத்திலும் செலவானத் தொகையைத் தான் திருப்பித்தர வேண்டும் என்ற ஒரு நல்ல முடிவை எடுக்கிறார். இப்படி முடிவு செய்வது அவர் இதுவரையிலும் நடந்து கொண்டதற்கு முற்றிலும் ஒரு புதுமையான செயல்பாடாகும். இம்முடிவை அவர் வெற்றிகரமாக அமுல்படுத்த வேண்டுமென்றால் அவர் மேலும் பத்து பதினைந்து வருடங்கள் கடுமையாக உழைத்திருக்க வேண்டும். குடும்பச் செலவை மிகவும் சுருக்கியிருக்க வேண்டும். ஆனால் நடந்தது என்ன? அவருக்கு வந்து சிறப்பான மனமாற்றத்திற்கு வாழ்க்கையும், ஒரு சிறப்பான Life Response–ஐ வழங்கியது. அதாவது இந்த திருமணத்திற்கான செலவை தானே முழுமையாக ஏற்றுக் கொள்வதாகவும், கார்டினரோ, திரு. பென்னட்டோ யாரும் எதையும் திருப்பித் தர வேண்டியதில்லை என்ற ஒரு முடிவை டார்சி எடுக்கிறான். இதிலிருந்து நாம் என்ன புரிந்து கொள்ள வேண்டும். முடியாது என்ற சூழ்நிலையில், முடியாது என்று முடிவு செய்து விடுவது சுலபம். ஆனால் முடியாத சூழ்நிலையிலும் எது முறையோ அதை நாம் செய்ய வேண்டும் என்று ஒருவர் முடிவு செய்யும் பொழுது நிலைமையே முற்றிலும் மாறி முடிவு எடுத்தவருக்கு சாதகமாக அமைகிறது.

இப்பொழுது சார்லெட்டிற்கு வருவோம். அவளுக்கு வயதாகி கொண்டு போகிறது. திருமண proposal கொண்டு வருபவர் எவரும் இல்லை. இத்தகைய சூழ்நிலையில் இருக்கின்ற எந்த ஒரு இளம் பெண்ணும் தன்னுடைய நட்பு வட்டாரத்தில் இருக்கின்ற வேறு எந்த பெண்ணிற்கும் திருமண வாய்ப்பு வந்ததென்றால் பொறாமைப்படுவாள், மனம் புழுங்குவாள். ஆனால் இப்படி பொறாமைப்படாமல் ஜேன் மேலும், லிசி, மேலும் பிங்கிலியும், டார்சியும் interest காட்டுகின்றனர் என்பதை அறிந்து கொண்டு "நீங்களும் அவர்களுக்கு response வழங்குங்கள். இது ஒரு நல்ல வாய்ப்பு விட்டுவிடாதீர்கள்" என்று உற்சாகம் ஊட்டுகிறார். இப்படிப்பட்ட பரந்த மனப்பான்மையும், நல்லெண்ணமும் திருமணத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்த ஒரு இளம் பெண்ணிடம் வெளிப்படுகிறது என்றால் இது மிகவும் புதுமையான ஒரு விஷயமாகும்.

ஜேன் ஆஸ்டின் உருவாக்கிய ஒரு பெண் கதாப்பாத்திரத்தினால்தான் இவ்வளவு பாஸிட்டிவாக நடந்து கொள்ள முடியுமே தவிர நிஜ வாழ்க்கையில் கல்யாண வாய்ப்புக் கிடைக்காத எந்த ஒரு இளம்பெண்ணும் இப்படி பெருந்தன்மையாக இருப்பாளா என்பது சந்தேகம்தான். இத்தகைய பெருந்தன்மைக்கு வாழ்க்கை அவளுக்கு ஒரு நல்ல வெகுமதியும் அளிக்கிறது. அதாவது அவளுக்கு ஏற்ற

ஒரு மணமகனை அவளிடம் அனுப்புகிறது. அவனும் ஒரு நல்ல சொத்துடன் வருகிறான். சார்லெட்டின் நடத்தையையும், கரோலினுடைய நடத்தையையும் நாம் இங்கு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். லிசியின் பக்கம் டார்சியின் கவனம் திரும்புகிறது என்று தெரிந்தவுடன் லிசியைப்பற்றிக் கிண்டலாகப் பேசுவது டார்சியின் மனதைக் கெடுக்க முயற்சிப்பது என்றெல்லாம் கரோலின் செயல்படுகிறாள். இதுதான் இளம்பெண்களிடம் நாம் பொதுவாகப் பார்க்கிற போட்டி மனப்பான்மையாகும். சார்லெட்டும் இப்படி நடந்துக் கொண்டிருந்தால் நாம் ஆச்சரியப்படுவதற்கேயில்லை. ஆனால் இப்படி போட்டி மனப்பான்மையோ, பொறாமையோ வெளிப்படுத்தாமல் வருகின்ற அதிர்ஷ்டத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் பாராமுகமாக இருந்து விடாதீர்கள் என்று சார்லெட் சொல்வதுதான் புதுமையாகவும், வித்தியாசமாகவும் இருக்கிறது.

இப்பொழுது கார்டினர் தம்பதிகளுக்கு வருவோம். லிசியின் பர்சனல் விஷயங்களில் அவர்கள் தலையிடாமல் ஒரு கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வது ஒரு புதுமையான செயல்பாடாகும். இதே நம் நாட்டில் உறவினர்கள் ஒரு வீட்டிற்கு வந்தால் புதிதாக என்ன நடக்கிறது, யார் எப்படி இருக்கிறார்கள், திருமணப் பேச்சு ஏதேனும் நடக்கிறதா, வந்திருக்கும் வீட்டிலுள்ள பிள்ளைகள் என்ன செய்கிறார்கள், படித்துக் கொண்டிருக்கிறார்களா, வேலை தேடிக் கொண்டிருக்கிறார்களா என்றிவைகளை எல்லாம் துருவி துருவி கேட்பார்கள். இதுதான் இந்தியாவில் நடக்கும். அதிலும் ஒரு பெண்ணிற்கு நிச்சயம் செய்ய முயற்சி எடுத்து ஏதோ ஒரு காரணத்தினால் அது கூடி வராமல் போய்விட்டது என்றும் இரண்டாவது பெண்மேல் ஒரு ஆண்மகன் interest காட்டுகிறான், ஆனால் அவளோ அவன் proposal-ஐ ஏற்காமல் மறுக்கிறாள் என்றிதுமாதிரியான ருசிகரமான செய்திகள் எல்லாம் நம் நாட்டில் உறவினர்கள் காதில் எல்லாம் விழுந்தால், ஏன் நிச்சயம் நின்றது, ஏன் இரண்டாவது மகள் நல்ல வசதியுள்ள, அந்தஸ்துள்ள, அழகான இளைஞனை மணக்க மறுக்கிறாள், பிண்ணனியில் என்ன நடந்தது என்ற தெரிந்து கொள்ளும்வரை ஓயவே மாட்டார்கள், தூங்கக் கூட மாட்டார்கள். கார்டினரிடம் லிசி டார்சி மிகவும் ஆணவம் பிடித்தவன், அடுத்தவர் சந்தோஷத்தைக் கெடுத்தவன், தன்னைவிட அந்தஸ்தில் குறைந்தவர்களை மதிக்காதவன் என்றெல்லாம் அவனை ஒரு முற்றிலும் நெகட்டிவ் நபராக வர்ணித்திருக்கிறாள். ஆனால் பிம்பெர்லி எஸ்டேட்டிற்கு இவர்கள் வந்த பொழுது அங்கிருக்கும் house keeper-ரோ தன்னுடைய முதலாளி மிகவும் தங்கமானவர், ஊழியர்களிடம் அன்பாகவும், பிரியமாகவும் பழகுபவர், மிகவும் பண்புள்ளவர் என்றெல்லாம் வர்ணிப்பதை இவர்கள் கேட்கிறார்கள். இப்படி நேரெதிரான வர்ணனைகளைக் கேட்பவர்கள் எவரும், அதுவும் மாமா, மாமி ஸ்தானத்தில் உறவினர்களாக இருக்கும் பட்சத்தில் "என்ன லிசி இது நீ டார்சி மிகவும் கெட்டவர் என்று வர்ணித்திருக்கின்றாய் house keeper-ரோ அவர் மிகவும் தங்கமானவர் என்கிறார். இதில் நீ சொல்வது சரியா? அவர்கள் சொல்வது சரியா? எது உண்மை" என்று நிச்சயம் கேட்பார்கள். ஆனால் அவர்கள் அப்படி அவளை ஒன்றும் கேட்கவில்லை. ஒரு நெருங்கிய உறவினரிடம் இத்தைகையக் ஒரு கட்டுப்பாடு இருப்பது மிகவும் புதுமையான விஷயமாகும். இத்தகையக் கட்டுப்பாட்டுடன் அவர்கள் நடந்து கொள்வதற்கு வாழ்க்கை எத்தகைய வெகுமதியை அளிக்கிறது என்ற ஒரு கேள்வி வருகிறது. அவர்களுக்கு நிச்சயம் வாழ்க்கை வெகுமதி அளிக்கத்தான் செய்கிறது. அந்த வெகுமதி என்னவென்றால் அவர்கள் நினைத்துக்கூட பார்க்க முடியாத உயரத்தில் இருக்கின்ற டார்சி அவர்களுடன் பிரியமாகப் பழகி அவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் அவனுடைய மாளிகைக்கு விருந்தினர்களாக வரலாம், போகலாம் என்று ஒரு உரிமையை அளிக்கிறான். இது அவர்கள் நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒரு கௌரவம் ஆகும்.

இதுவரையிலும் P&P கதாப்பாத்திரங்கள் வெளிப்படுத்தியுள்ள புதுமைகளை நாம் பார்க்கிறோம். பார்ப்பதோடு மட்டும் நாம் நின்றுவிடக் கூடாது. இந்தக் கதையையும் நம்முடைய வாழ்க்கையையும் நாம் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும். அதாவது நம்முடைய வாழ்க்கையில் இம்மாதிரி என்னனென்ன புதுமைகளைப் புகுத்த முடியும் என்று பார்க்க வேண்டும். நமக்கு மற்றவர்களோடு இருக்கின்ற உறவில் சிக்கல்கள் எழுந்தால், சுமுகக் குறைவு ஏற்பட்டால் டார்சி செய்ததுபோல் அவர்களைத் திருத்த முயற்சி செய்யாமல் நம்மை நாமே திருத்திக் கொண்டு பழையபடி சுமுகத்தை நிலைநாட்ட முடியுமா என்று பார்க்க வேண்டும். நமக்குத் தெரிந்தவர்களுக்கு அதிர்ஷ்டம் வருகிறதென்றால் அதை மனதார வரவேற்று சார்லட் போலவும், லிசி போலவும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த முயற்சி செய்யலாம். கார்டினர் தம்பதிகள் போல

**N. Asokan**

**Secretary & senior Research Fellow**

அடுத்தவர்களின் பர்சனல் விஷயங்களில் அதிகம் தலையிடாமல் ஒரு கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளலாம். இந்தக் கதையைப் பொறுத்த வரையிலும் திருமண விஷயத்தில் power of values மற்றும் நெறியான செயல்பாடு மற்றும் தனித்தன்மை, இலட்சிய மனப்பான்மை இவையெல்லாம் எப்படி சிறப்பாக பலிக்கின்றன என்பதைப் பார்க்கின்றோம். திருமண விஷயம் என்று மட்டுமில்லாமல் வாழ்க்கையின் மற்ற எல்லா இடங்களிலும், அதாவது வேலை, குடும்ப வாழ்க்கை, அலுவலக ஈடுபாடு, அன்னை சேவை மற்றும் பொது சேவை என்ற எல்லா இடங்களிலும் மேற்கூறிய values, individuality மற்றும் இலட்சிய மனப்பான்மை என்று எல்லாமே அபரிமிதமானப் பலனைக் கொடுக்கும். இதை நாம் புரிந்து கொண்டு வெற்றிகரமாக நம் வாழ்க்கையில் அமுல்படுத்தினோம் என்றால் P&P commentaries மூலம் அப்பா நமக்கு வழங்க விரும்பிய அறிவு, அதிர்ஷ்டம், அருள் என்றெல்லாவற்றையும் நாமும் முழுமையாகப் பெற்றுக் கொண்டோம் என்று வரும். ஆகவே இத்தகைய முயற்சிக்கு முன்வருபவர்களுக்கு என் நல்வாழ்த்துக்கள்.

------